8.0 **ஆட்சேர்ப்புச் செய்தல்**.- மேலே 5.0 மற்றும் 6.0 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில் தகைமைகளைக் கொண்டுள்ள, எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த, மேலே குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் புள்ளிகளைப் பெறும் ஒழுங்குமுறையின் அடிப்படையில் தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வரைஞர் - பயிற்றுவித்தல் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

9.0 **சம்பள அளவுத்திட்டம்**.- 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் MN-3-2016 இன் கீழ் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வரைஞர் தரம் III

ரூபா 31,040 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 10 × 750 - ரூபா 57,550.00 (03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை II இன் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.)

இலங்கை தொழில்நுட்ப சேவையின் வரைஞர் - பயிற்றுவித்தல் தரம் மாதாந்த கொடுப்பனவு ரூபா 27,140.00 (03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை V இன் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.)

10.0 **பரீட்சைக் கட்டணங்கள்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். விண்ணப்பதாரர்கள் மீளளிக்கப்படாத ரூபா 1,000 பரீட்சைக் கட்டணத்தை நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு இலங்கை வங்கிக் கிளையின் ஊடாக "கட்டடத் திணைக்களத்தின் பத்தரமுல்லை இலங்கை வங்கிக் கிளையிலுள்ள 7042710 ஆம் இலக்க கணக்கிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப் படிவத்தின் 12 ஆம் இலக்கத்தின் கீழ் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும்.

11.0 பரீட்சார்த்தி ஒருவர் விண்ணப்பப்படிவத்தில் ஏதேனுமொரு உண்மைக்குப் புறம்பான கூற்றினைத் தெரிவித்திருப்பின், அதன் காரணமாக அவர், தகைமையற்றவராக கருதப்படுவார் எனவும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அது பற்றி அறியவரும் பட்சத்தில், அவரை சேவையிலிருந்து நீக்குவதற்கும் இடமுண்டு.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பதாரர்கள் தமது மாதிரிக் கையொப்பத்தை, அரசாங்க பாடசாலை அதிபர் /ஓய்வுபெற்ற தலைவர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது 5,71,380 ரூபா அல்லது அதற்கு கூடிய அல்லது வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவிநிலை அலுவலர் அல்லது ஏனைய மத வழிபாட்டுத்தலங்களின் மதப் போதகர்கள் ஆகிய யாரேனும் ஒருவரால் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் பணிபுரியும் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பப்படிவங்களை தத்தமது நிறுவனத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும்.

13.0 இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பாக தீர்மானமெடுக்கும் அதிகாரம் கட்டடப் பணிப்பாளர் நாயகத்திற்கேயுண்டு. அவ்வாறே சிங்களம்/ தமிழ் மொழி பெயர்ப்பில் ஏதேனும் தெளிவின்மை காணப்படும் பட்சத்தில், சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவானதாகவிருக்கும்.

பொறியியலாளர் எம். எச். எம். இஸ்மாயில்,
கட்டடப் பணிப்பாளர் நாயகம்.

கட்டடத் திணைக்களம்,
'செத்சிறிபாய',
பத்தரமுல்லை,
2021, மாச்சு 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கட்டடத் திணைக்களம்**

இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் வரைஞர் - (பயிற்றுவித்தல் தரம்)

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - S
தமிழ் - T

(உரிய ஆங்கில எழுத்தைக் கூட்டினுள் எழுதுக.)

01. (i) முழுப் பெயர் :----.
(ii) முதலெழுத்துக்களுடனான பெயர் (தமிழில்) :----.
(iii) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

02. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் :

(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
(ii) தனிப்பட்ட முகவரி :----.
(iii) தொலைபேசி இலக்கம் : ..............................
கைத்தொலைபேசி இலக்கம் : ................................

03. பால் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

05. (i) பிறந்த திகதி :

ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

(ii) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள்: [ ][ ]

06. விவாகமானவர் /விவாகமாகாதவர் :
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

07. க.பொ.த. (சா.த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் (முதற் தடவை) (துயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

(i) பரீட்சையில் சித்தியடைந்த வருடம் மற்றும் மாதம் :----.
(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |

08. க.பொ.த. (சா/த) பரீட்சை தொடர்பான விபரங்கள் (இரண்டாவது தடவை) தேவையாயின் மாத்திரம் (துயவுசெய்து பிரதிகளை இணைக்கவும்) :

(i) பரீட்சையில் சித்தியடைந்த வருடம் மற்றும் மாதம் :----.
(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |

09. க.பொ.த. (உ/த) பரீட்சை தொடர்பான விபரங்கள் (துயவுசெய்து பிரதிகளை இணைக்கவும்) :

பரீட்சையில் சித்தியடைந்த வருடம் மற்றும் மாதம் :----.
விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |

10. ஏனைய தகைமைகள்.- தொழில்நுட்ப /தொழில்சார் (துயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :----.
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

11. உரிய துறை சம்பந்தமாக பெற்ற அனுபவம் :----.
(துயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :----.
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

மேலே 10, 11 தொடர்பாக தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைப்புக்களாக சமர்ப்பிக்கப்படுவது இன்றியமையாததாகும்.

12. **பரீட்சைக் கட்டணம்** :

| பணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டின் இலக்கம் | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

| |
|---|
| ரூபா 1,000 பரீட்சைக் கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைக் கழராதவாறு இங்கே ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை தங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.) |

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ............................ (முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், ............................ ஆந் திகதி தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
பதவி முத்திரை :----.

14. விண்ணப்பதாரியின் பிரகடனம் :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் உண்மைக்குப் புறம்பானதும் பிழையானதெனவும் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், நான் தகுதியற்றவராவேன் என்பதுடன், நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில், எந்தவொரு நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்குள்ளாவேன் என்பது பற்றியும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்**

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................................... தற்போது இந்த அமைச்சில் /திணைக்களத்தில் ........................... ஆக நிரந்தர /தற்காலிக/ அமைய அலுவலராக சேவையாற்றுகின்றார் எனவும், அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில், சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அறியத்தருகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை

03-720

## கல்வி அமைச்சு

### ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் – 2021/2022

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 28/2016 இற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பட்டதாரி அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆசிரியர் கல்வி பாடநெறியினை இதுவரை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள், ஆசிரியர் உதவியாளர்கள், இச்சுற்றறிக்கை இலக்கம் 28/ 2016 இற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2021, ஏப்பிறல் 27 ஆந் திகதிக்கு முன்னர் “கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிருவாகக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல” என்ற முகவிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

இச்சுற்றறிக்கை விண்ணப்பப்படிவம் மற்றும் ஆலோசனைப் படிவத்தை கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலம் (www.moe.gov.lk) எந்தவொரு வலயக் கல்வி அலுவலகத்தின் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

பேராசிரியர் கே. கபில சி. கே. பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு, இசுருபாய,
பத்தரமுல்ல.

03-587

---

### இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக் கொள்ளல்

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உப புகையிரத நிலைய அதிபர் பதவிகளுக்கு வெற்றிடம் நிலவும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உப புகையிரத நிலையங்களுக்காக வேண்டி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. ரதெல்ல
02. பத்தன்பஹ
03. மஹய்யாவ
04. நாவின்ன
05. பன்னிப்பிட்டிய
06. வட்டரெக்க
07. புவக்பிட்டிய
08. வனவாசல
09. பெம்முல்ல
10. வந்துரவ
11. கிராம்பே
12. திம்பிரியாகெதர
13. லியனகேமுல்ல
14. கப்புவத்தை
15. முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்
16. கட்டுவ
17. வயிக்கால
18. எருக்கலம்பிட்டி நாகவில்லு
19. மங்கலஎலிய
20. பெந்தொட்ட
21. தாண்டிக்குளம்
22. நேரியகுளம்
23. ஈரட்டிபெரியகுளம்
24. அறிவியல் நகர்
25. மிருசுவில்
26. லக்ஷஉயன
27. மொல்லிபொத்தான
28. அவுக்கன
29. பயாகல வடக்கு
30. பின்வத்தை
31. நாக்குலுகமுவ
32. பேரலந்த

*1.* ***உப புகையிரத நிலைய அதிபர்களின் கடமை விபரம்.-***

*பிரவேசப் பத்திர விற்பனை நிலையத்திற்கு பொறுப்பாக சேவையில் ஈடுபடுத்தப்படும் பிரதிநிதிகள் அந்தந்த நிலையங்களில் நிறுத்தப்படும் புகையிரதங்களின்படி 24 மணி நேரமும் பிரவேசப்பத்திரம் விற்பனை செய்தல் வேண்டும். பார்சல் கையேற்றல், கிடைக்கும் பார்சல்களை உரியவர்களிடம் ஒப்படைத்தல், தினமும் ஒன்று சேரும் பணத்தை பிரதான புகையிரத கணக்கு உத்தியோகத்தருக்கு அனுப்பி வைத்தல், நிலையத்தை சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் புகையிரத முகாமையாளரினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்படும் வேறு கடமைகளும் இப்பிரதிநிதிகளின் பொதுவான கடமையாகும்.*

*2.* ***கொடுப்பனவு.-***

*நிரந்தர சேவையாளர் தொகைக்கு உட்படாத பதவியாகும். தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு அந்தந்த நிலையத்தின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தரகுப் பணமும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்படும். மேலும் ஆரம்ப தரகுப் பணம் ரூபா 310 ஆவதுடன் (குறைந்த தரகுப் பணம் ரூபா 310 இன் படி தரகுப் பணத்தை கணக்கிடும்போது கிடைக்கும் முழு தரகுப் பணம் ரூபா 10,000 க்கு குறைவாயின் ரூபா 10,000 ஆன தரகுப் பணம் கிடைக்கும்) தரகுப் பணத்திற்கு மேலதிகமாக ரூபா 5329 ஆன கொடுப்பனவும் வழங்கப்படும்.*

*3.* ***ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.-*** *ஒரு விண்ணப்பதாரிக்கு தமது தூர எல்லைக்குள் உள்ளதும் வெற்றிடமாகவுள்ள மூன்று உப புகையிரத நிலையங்களை விருப்பத்தின்படி விண்ணப்பிக்க முடியுமாகும். பரீட்சையின் போது இரு உப புகையிரத நிலையங்கள் அல்லது அதற்கு மேல் உப புகையிரத நிலையங்களுக்காக கூடிய புள்ளிகளை பெற்றால் விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பத்தின் வரிசைப்படி உப புகையிரத நிலையத்திற்காக நியமிப்பதற்கு கருத்திற் கொள்ளப்படும். ஏதேனும் உப புகையிரத நிலையத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டதன் பின்பு விருப்பத்தை தெரிவித்த ஏனைய உப புகையிரத நிலையங்களில் வெற்றிடம் காணப்பட்டாலும் அவற்றுக்கு நியமனம் பெற எந்தவித உரிமையும் கிடையாது. அவ்வாறான புகையிரத நிலையத்திற்கான விருப்பு நிராகரிக்கப்படும்.*

*4.* ***வயதெல்லை.-*** *விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று வயது 18 க்கு குறையாமலும் 45 க்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்.*

5. ***கல்வித் தராதரம்.-*** *க. பொ. த. (சா/தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலத்துடன் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் சிறப்பு சித்தியுடன் ஆறு விடயங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*6.* ***வேறு தகைமைகள்.-***

(i) *விண்ணப்பதாரி குறிப்பிட்ட உப புகையிரத நிலையத்திலிருந்து 20 கி. மீ. தூரத்திற்குள் (நேரடி தூரம்) குறைந்தது 05 வருட காலம் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். நியமனக் கடிதம் கிடைப்பதற்கு முன்பு இது பற்றி உறுதிப்படுத்தும் பொருட்டு நம்பத்தகுந்த கடிதங்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். (கிராம அலுவலர் சான்றிதழ், பிரதேச செயலாளரின் சான்றிதழ், தேர்தல் இடாப்பு பிரதி போன்றவையாகும்.) விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்படும் முகவரி நிரந்தர முகவரியாக இருக்க வேண்டியதுடன் புகையிரத நிலையத்திற்குள்ள நேரடி தூரத்தை கணக்கிட வேண்டியது அம்முகவரியில் இருந்தாகும்.*

(ii) *விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.*

(iii) *உயரம் 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாமலும், நெஞ்சளவு 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.*

(iv) *உப புகையிரத நிலைய அதிபராக தற்போது கடமை புரிபவர்களுக்கும் அல்லது அவ்வாறு சேவை செய்து சேவை முடிவுறுத்தப்பட்டவர்களுக்கும் இதற்காக வேண்டி விண்ணப்பிக்க முடியாது.*

(v) *விண்ணப்பதாரி சிறந்த தேகாரோக்கியமும் சிறந்த கண் பார்வையும் உடையவர் என வைத்திய பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்பே தேர்ந்தெடுக்கப்படுவர். சிறந்த கண்பார்வை உடையவராக இருப்பது கட்டாயமாகும்.*

7. ***தேர்ந்தெடுக்கப்படும் முறை.-***

*புகையிரத முகாமையாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். போட்டிப் பரீட்சையின் போது சகல விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் கீழ் இரு கேள்வித் தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும். பரீட்சையில் தகுதி பெறுவதற்காக வேண்டி ஒவ்வொரு விடயத்திலும் 40% வீத புள்ளிகளை பெறல் வேண்டும்.*

(i) ***மொழித்தேர்ச்சி.-*** *காலம் 01 மணி - முழுப்புள்ளி 100 ஆகும்.*

*விளங்கிக் கொள்ளுதலுடன், சரியான மொழி நடையை பிரயோகித்தல் சம்பந்தமாக விடயத்துடன் தொடர்புடைய கேள்விகளை உள்ளடக்கிய கேள்வித்தாளாகும்.*

(ii) ***நுண்ணறிவு*** *:- காலம் 01 மணி - முழுப் புள்ளி 100 ஆகும்.*

கேள்வித் தாளிலேயே விடை எழுத வேண்டிய கணித குளறுபாடு, மொழித் தொகுதி, அட்டவணை, பொருந்திப் பார்த்தல் குறிப்பு, படம், வரைபு போன்றவற்றின் உதவியுடன் தர்க்க ரீதியாக சரியான உடனடி தீர்மானம் எடுக்கும் சிறந்த ஆற்றலை பரிசீலனை செய்யும் பல்தெரிவிலான கேள்வித்தாளாகும்.

**குறிப்பு :**

(i) போட்டிப் பரீட்சையில் தகுதி பெற்றவர்கள் மத்தியில் அந்தந்த பிரவேச பத்திர விற்பனை நிலையத்தின் படி கூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரி குறிப்பிட்ட பிரவேசப்பத்திர விற்பனை நிலையத்திற்கு நியமிப்பதற்காக வேண்டி தகுதிகளை ஆராயும் பொருட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்.

(ii) நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் ஏதும் வழங்கப்படமாட்டாது.

(iii) தகுதி பெற்றவர்கள் சமமான புள்ளிகளை பெற்றிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் புகையிரத பிரவேச பத்திர விற்பனை முகவரிடம் அல்லது உப புகையிரத நிலைய அதிபரின் கீழ் அனுமதிக்கப்பட்ட பதிலீட்டாளராக சேவை செய்துள்ள விண்ணப்பதாரிக்கு முதலிடம் வழங்கப்படும். அவ்வாறில்லாவிடின் குறிப்பிட்ட உப புகையிரத நிலையத்திலிருந்து மிகவும் கிட்டிய தூரத்தில் வசிப்பவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

8. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை.-**

(i) தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் புகையிரத முகாமையாளரினால் தீர்மானிக்கும் படி அல்லது குறைந்தது 25,000 ரூபா தொகை பாதுகாப்பு பிணைப் பணமாக புகையிரத முகாமையாளரின் பெயருக்கு வைப்புச் செய்யப்படல் வேண்டியதுடன் புகையிரத முகாமையாளருடன் கையொப்பமிடும் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படியும் கடமை மேற்கொள்ளல் வேண்டும். அவ் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறுதல் சேவையை முடிவுறுத்துவதற்கு காரணமாக அமையும்.

(ii) இது ஒப்பந்த அடிப்படையிலானதுடன் வருடத்திற்கு வருடம் இவ் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு புதுப்பிக்கப்படாத விடத்து ஒப்பந்தம் முடிவு பெறும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தான் நியமிக்கப்படவுள்ள நிலையத்தின் கடமைகள் பற்றி தெரிந்து கொள்வதற்காக வேண்டி புகையிரத முகாமையாளரினால் கூறப்படும் புகையிரத நிலையத்தில் 14 நாட்கள் பயிற்சியை பெறல் வேண்டும். இப்பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவுகள் ஏதும் வழங்கப்படமாட்டாது.

(iv) தனக்குப் பதிலாக உதவிக்காக வேலை செய்வதற்கு புகையிரத திணைக்களத்தின் அனுமதியுடன் உதவியாளர் ஒருவரை அனுமதித்துக் கொள்ள முடிவதுடன் உதவியாளருக்காக எவ்வித கொடுப்பனவும் திணைக்களத்தினால் வழங்கப்படமாட்டாது. நிலையத்தின் முழுப் பொறுப்பும் உப புகையிரத நிலைய அதிபரையே சாரும்.

(v) பயிற்சியை பெறும் காலவெல்லைக்குள் அல்லது உப புகையிரத நிலைய அதிபராக கடமையாற்றும் காலவெல்லைக்குள் அல்லது நேர்முகப் பரீட்சையின் போது அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியினால் / அவருக்காக தரப்பட்டுள்ள/ வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானதெனவும் அங்கீகாரம் அற்றதெனவும் தெரியவருமிடத்து எவ் அறிவித்தலுமின்றியும் நஷ்டஈடுகள் எதுவுமின்றியும் உடனடியாக அவரின் சேவையைப் பெறல் முடிவுறுத்தப்படும்.

(vi) உப புகையிரத நிலைய அதிபராக தேர்ந்தெடுக்கப்படுபவர் அத்தேர்ந்தெடுப்பு மூலம் புகையிரத திணைக்களத்தில் எந்த நிரந்தர பதவியையும் வழங்குவதற்கு திணைக்களம் பொறுப்புடையதல்ல.

9. **சேவை நிபந்தனை :**

(i) கையொப்பமிடும் ஒப்பந்தத்தில் ஏதேனும் நிபந்தனை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் அவரின் நியமனம் முடிவுறுத்தப்படும்.

(ii) புகையிரத முகாமையாளரினால் காலத்திற்கு காலம் இடப்படும் நிபந்தனைகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப் படிவதற்கு இணங்குதல் வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்.-** சகல விண்ணப்பதாரிகளும் மீண்டும் வழங்கப்படாத 500 ரூபா தொகை பரீட்சைக் கட்டணமாக புகையிரதப் பொது முகாமையாளர் எனும் பெயருக்கு மக்கள் வங்கி, நகர மத்திய கிளை கணக்கு இலக்கம் 176100129027313 க்கு வரவிலிட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். வேறு விதங்களில் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும். பூரணமற்றதும், முறையற்றதுமான விண்ணப்பப்படிவங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும்.

11. **விண்ணப்பப்படிவத்தை முன்வைத்தல்.-**

தட்டச்சு கடதாசி அளவுள்ள (ஏ-4) கடதாசியில் விண்ணப்பதாரியினாலேயே விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உப புகையிரத நிலைய அதிபர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்" எனக் குறிப்பிட்டு புகையிரத முகாமையாளர் த. பெ. இலக்கம் 355, புகையிரத முகாமையாளர் அலுவலகம், கொழும்பு - 10 எனும் முகவரிக்கு 2021.04.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். (மாதிரி விண்ணப்பப்படிவம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.)

12. **விண்ணப்பப் பத்திரத்தை உறுதிப்படுத்தல்.-**

விண்ணப்பப் பத்திரத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்/அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்/ அல்லது வருடத்திற்கு ரூபா 2,37,060 க்கு குறையாத ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

எம். ஜே. எம். பெர்னாந்து,
புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் காரியாலயம்,
கொழும்பு - 10,
2021, மாச்சு 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை**

விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையம் :- (சிங்களத்தில்/ தமிழில்)
முதலாவது தெரிவு :...............................................................................................
இரண்டாவது தெரிவு :...............................................................................................
மூன்றாவது தெரிவு :...............................................................................................

விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையம் :- (ஆங்கிலத்தில்)
முதலாவது தெரிவு :...............................................................................................
இரண்டாவது தெரிவு :...............................................................................................
மூன்றாவது தெரிவு :...............................................................................................

1.
(i) முழுப்பெயர் : (சிங்களத்தில்/ தமிழில்) :...............................................................................................
(ii) முழுப்பெயர் : (ஆங்கிலத்தில்) :...............................................................................................
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் : (சிங்களத்தில்/ தமிழில்) :...............................................................................................
(iv) முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கிலத்தில்) :...............................................................................................

2. நிரந்தர முகவரி :-
(i) சிங்களத்தில்/ தமிழில் :-----.
(ii) ஆங்கிலத்தில் :-----.
(iii) தொலைபேசி இலக்கம் (வீடு) :-----. கையடக்க :-----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

3.
(i) பிறந்த திகதி :-
2021.04.27 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

(விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி தினத்தன்று)
(ii) உயரம் :-----.
(iii) மார்பளவு :-----.

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. மாவட்டம் (சிங்களத்தில்/ தமிழில்) ☐ ஆங்கிலத்தில் ☐

6. பிரதேச செயலாளர் பிரிவு (சிங்களத்தில்/ தமிழில்) ☐ ஆங்கிலத்தில் ☐

கிராம அலுவலர் பிரிவு (சிங்களத்தில்/ தமிழில்) ☐ ஆங்கிலத்தில் ☐

7. உமது நிரந்தர வசிப்பிடத்திலிருந்து நீர் விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையத்திற்குள்ள தூரம் (நேரடி தூரம்) கி. மீ. மூலம் குறிப்பிடவும் :-----.

| உப புகையிரத நிலையம் | தூர அளவு (கி. மீ.) |
|---|---|
| | |
| | |
| | |

8. கல்வித் தராதரம் : க. பொ. த. (சா. தரம்)

| வருடமும் - சுட்டெண்ணும் | விடயங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

9. வேறு தகைமைகள் :-----.

10. பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :- (சிங்களம்/ தமிழ்) [ ]

11. நீர் ஏதாவது குற்றம் காரணமாக நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டிருப்பின் விபரத்தை தருக :................

12. ........... ஆந் திகதி மக்கள் வங்கியின் ........... கிளைக்கு ரூபா 500 ஐ செலுத்தி பெற்றுக்கொண்ட பண வரவு பற்றுச்சீட்டினை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன். (வேறு வழிகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் விண்ணப்பப்பத்திரத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும்.)

13. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :-

(அ) இவ் விண்ணப்பப்பத்திரத்தில் தன்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

(ஆ) தன்னால் வழங்கப்பட்டுள்ள இத் தகவல்கள் பொய்யானதெனவும் பிழையானதெனவும் தான் நியமிக் கப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்படுமிடத்து நான் தகுதியற்றவராக கருதப்படுவதுடன் நியமனம் பெறப்பட்ட பிறகு கண்டுபிடிக்கப்படுமிடத்து தனது சேவையை முடிவுறுத்துவதற்கு நான் கீழ்ப் படிவதாகவும் அறிவேன்.

-----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்பத்திரத்தை முன்வைக்கும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் .................. ஐ உடைய திரு. ......................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும் அவர் இன்று என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

-----
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.
(இறப்பர் முத்திரையைப் பொறிக்கவும்.)

## இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2019 (2021)

(முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி)

இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க மேற்படி பாடநெறி இல. 1930/ 12 மற்றும் 2015.09.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் 2021, மே மாதம் வார இறுதி பாடநெறியாக 15 வாரங்கள் சனிக்கிழமைகளில் ஆரம்பித்து நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

2. (i) இப்பாடநெறி ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுவதுடன், பாடநெறியின் இறுதியில் ஒவ்வொரு விடயம் சம்பந்தமாகவும் இறுதிப் பரீட்சை நடைபெறும். அப்பெறுபேறுகளின்படி பாடநெறியில் சித்தியடைவது தொடர்பாக தீர்மானிக்கப்படுவதுடன். சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மேற்படி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்படுவர். பாடநெறிக்கு அலுவலர்களைத் தேர்ந்தெடுத்தல், பாடநெறியை நெறிப்படுத்தல், பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல், பாடநெறி சான்றிதழ்களை வெளியிடல் மற்றும் பாடநெறிக்கான சலுகைக் காலம் வழங்கல் சம்பந்தமாக அப்பீடத்தின் பீடாதிபதியினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பாடநெறியைத் தொடரும் பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில், இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் தண்டனை மற்றும் தாபனக்கோவையின் ஏற்பாடுகள் என்பனவற்றுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் பாடநெறியின் ஆரம்பத்தில் குறித்த சட்டதிட்டங்கள் மற்றும் பாடநெறிகள் சம்பந்தமாக தங்களுக்கு அறிவிக்கப்படும்.

3. இப்பாடநெறி தொடர்பாக விண்ணப்பிப்பதற்கான மாதிரிப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரி தாமாகவே விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளதுடன், இலங்கை தொழில்நுட்ப சேவையைச் சார்ந்த மத்திய அரசாங்கத்தின் அலுவலர் ஒருவராயின், தமது திணைக்களத்தின் தலைவர் ஊடாகவும், இலங்கை தொழில்நுட்ப சேவையைச் சார்ந்த மாகாண அரசாங்கத்தின் அலுவலர் ஒருவராயின், அவர்கள் சேவையாற்றுகின்ற மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும், 2021, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடம், இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொடை எனும் முகவரிக்கு தனது விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "இலங்கை தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2019 (2021)" (முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி) என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை எவ்வித விசாரணையுமின்றி நிராகரிப்பதற்கு பீடாதிபதிக்கு அதிகாரமுண்டு.

4. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்.**- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின் பீடாதிபதி திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை பாடநெறியின் ஆரம்பத்தில் அல்லது பாடநெறி கால எல்லையினுள் முன்னளித்து ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரர்கள் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) தமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடமை அடையாள அட்டை ;

அல்லது

தமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆள் அடையாளத்தை உறுதிசெய்யக்கூடிய ஆவணம்.

5. **விண்ணப்பம்** :

(i) "ஏ4 அளவுடைய கடதாசியில் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை 'தட்டச்சு' செய்து தயாரித்துக்கொள்ள முடியுமாக இருந்தபோதிலும், அது சரியாகவும் நேர்த்தியாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தினாலேயே நிரப்பப்படல் வேண்டும். விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மாத்திரம் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு

அலுவலர்களின் பெயர் பாடநெறியின் சகல சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப்படுவதன் காரணமாக அது தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். ஏதேனும் ஒரு வகையில் பாடநெறிக் காலத்தினுள் அதில் மாற்றமேற்படும் பட்சத்தில், அதுபற்றி திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் எழுத்துமூலம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பம் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்திராத விண்ணப்பங்களும், முழுமையான தகவல்கள் வழங்கப்படாத விண்ணப்பங்களும் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தினை ஒத்திருக்கின்றதா என்பது பற்றி விண்ணப்பதாரி பரிசோதித்துப் பார்க்க வேண்டியுள்ளதுடன், அவ்விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

(iii) விண்ணப்பதாரியினால் அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட தபால் முத்திரை அளவிலான 2 வர்ணப் புகைப்படங்களை அனுப்புதல் வேண்டும். அதன் ஒரு பிரதியை விண்ணப்பத்தில் முற்பக்கத்தில் வலது பக்க மேல் மூலையில் தரப்பட்டுள்ள கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். அத்துடன், மற்றைய புகைப்படத்தை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

6. **பாடநெறிக் கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம் :**

(i) இப்பாடநெறியைத் தொடரவுள்ள அலுவலர்கள் 17,500.00 ரூபா தொகையை மக்கள் வங்கி, கங்கொடவில கிளையில், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின், பீடங்களுக்கான அபிவிருத்தி நிதிய நடமாடும் கணக்கு இல. 097100140002229 இல் வரவு வைத்தல் வேண்டும். விண்ணப்பதாரி பணியாற்றுகின்ற நிறுவனத்தின் மூலம் காசோலையாகவோ, வங்கி வரைவாகவோ, குறித்த விண்ணப்பதாரியினால் குறிப்பிட்ட தொகையை வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பிரிவின் பீடாதிபதிக்கு பாடநெறி ஒருங்கிணைப்பாளரினால் அறிவிக்கப்படும் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அதில் தாபனக் கட்டணங்கள், அச்சுக் கட்டணங்கள், பரீட்சைக் கட்டணங்கள், வளவாளர்களுக்கான கட்டணங்கள், ஒருங்கிணைப்புக் கட்டணங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன.

(ii) எவ்வாறாயினும், ஆரம்பத்தில் பாடநெறிக்கு உரிய பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில், அதன் பின்னரான தவணைகளில் அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றும்போது, ரூபா 1,000.00 பரீட்சைக்கான பதிவுக் கட்டணமாகவும், ரூபா 2,000.00 பரீட்சைக் கட்டணமாகவும் செலுத்துதல் வேண்டும். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடாதிபதியின் ஆலோசனைகளுக்கமைய அக்கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும் ;

(iii) எச்சந்தர்ப்பத்திலும் இப்பாடநெறிக்காக அறவிடப்பட்ட தொகை மீளளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சை அல்லது பாடநெறி தொடர்பாகவோ வேறொரு அலுவலருக்கோ மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7. **பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் :**

(i) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு ஐந்து (5) ஆண்டுகளைக் கடப்பதற்கு முன்னர் சகல அலுவலர்களும் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான மூன்றாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ii) I ஆம் தரத்துடைய அலுவலர்களுக்கு மேலதிகமாக இரண்டாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த அலுவலர்களும் மூன்றாம் வினைத்திறன்காண் தடைக்குரிய பாடநெறியினை பூரணப்படுத்த முடியும்.

**குறிப்பு**.- திணைக்களத் தலைவரினால் அந்தந்த அலுவலர்களின் சேவைமூப்பு மற்றும் 7 (i), 7 (ii) ஆம் பந்திகளின் விடயங்கள் சம்பந்தமாக அவதானம் செலுத்தும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

8. **பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கும் முறை**.- இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்கள் அத்தரத்தில் அமர்த்தப்பட்ட சேவை மூப்பின் ஒழுங்குமுறைக்கமைய, பாடநெறி தொடர்பாக அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் போது முன்னுரிமை அளிக்கப்படும்.

9. விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல அலுவலர்களினதும் விபரங்கள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் பேணப்பட்டு வருகின்ற தரவு முறைமையினுள் உள்வாங்கப்படுவதுடன், ஒரு வருடத்தில் 400 உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழு மாத்திரம் இப்பாடநெறியில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் அரச சேவைகள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் தெரிவு செய்யப்படும் அலுவலர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படும். **அவ்வாறு அறிவிக்கப்பட்டதன் பின்னர் கலந்து கொள்ளாத விண்ணப்பதாரிகளுக்கு பல்கலைக்கழகத்தின் மூலம் மீண்டும் அறிவிப்பதற்கு கடப்பாடு இல்லை என்ற வகையில் அது அலுவலர்களுக்கு உரித்தான ஒரு சந்தர்ப்பம் என்ற வகையில் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்**.

10. **பாடநெறி தொடர்பான பாடத்திட்டம்** :

| தொடர் இல. | பாடத்திட்டம் | கிரடிட் எண்ணிக்கை | கிரடிட் மணி. |
|---|---|---|---|
| 01 | அரசாங்க நிதி முகாமைத்துவம் | 2 | 30 |
| 02 | மனிதவள முகாமைத்துவம் (மூலக் கோட்பாடு) | 2 | 30 |
| 03 | பிரச்சினை தீர்த்தல் முகாமைத்துவம் (நிறுவகத்தின் நோக்கங்கள், குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் போதான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் கோட்பாடுகளின் நடைமுறைப் பயன்பாடு) | 2 | 30 |
| 04 | நிறுவன நடத்தை | 2 | 30 |
| 05 | செயற்திட்ட அறிக்கை- தத்தமது தொழிற்துறை சம்பந்தமாக முகங்கொடுக்க நேரிடுகின்ற பிரச்சினை அல்லது தொழிற்துறை தொடர்பான ஆய்வுக் கட்டுரை | 2 | 30 |
| | | **10** | **150** |

11. இவ்வறிவித்தலின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத எவ்வித விடயம் சம்பந்தமாகவும் அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் தீர்ப்பே இறுதியானதாகும்.

12. இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பதங்களிடையே ஏதேனும் இணக்கப்பாடின்மை நிலவுகின்றதாயின் சிங்கள மொழிப் பதமே சரியானதாக அமைந்திருக்கும்.

**ஜே. ஜே. ரத்னசிறி**,
செயலாளர்,
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2021, மாச்சு 10.

(வர்த்தமானி அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பம் www.pubad.gov.lk எனும் வலைத்தளத்தில் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.)

மாதிரி விண்ணப்பப்படிவம்

தபால் முத்திரை அளவிலான புகைப்படம் இங்கு ஒட்டவும்.

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2019 (2021)**
**(முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி)**

**Third Efficiency Bar Examination for the Officers in Grade I of Sri Lanka Technological Service - 2019 (2021)**
**(Three Months Certificate Course on Management)**

01. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
உதாரணம் : Gunawardhana, M. G. B. S. K.

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

02. தாங்கள் மாகாண அரசாங்க சேவை அல்லது எவ்வித அரசாங்க சேவைக்கு உட்படுகின்றீர்கள் என்பது பற்றி உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக :

(அரசாங்க சேவை-10/ மேல் மாகாண அரசாங்க சேவை-01/ மத்திய மாகாண அரசாங்க சேவை-02/ தென் மாகாண அரசாங்க சேவை-03/ வட மாகாண அரசாங்க சேவை-04/ கிழக்கு மாகாண அரசாங்க சேவை-05/ வடமேல் மாகாண அரசாங்க சேவை-06/ வடமத்திய மாகாண அரசாங்க சேவை-07/ ஊவா மாகாண அரசாங்க சேவை-08/ சப்பிரகமுவ மாகாண அரசாங்க சேவை-09)

03. பதவிப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

04. தாங்கள் பணியாற்றுகின்ற உப திணைக்களம்/பிரிவு :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(சிங்களத்தில்/தமிழில்) :----.

05. தாங்கள் பணியாற்றுகின்ற திணைக்களம் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(சிங்களத்தில்/தமிழில்) :----.

06. அரசாங்க முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(சிங்களத்தில்/தமிழில்) :----.

07. தனிப்பட்ட முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
